# இலங்கைத் தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## தகவல் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்த்தல்

**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் (TRCSL) மேற்குறித்த பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகைமைபெற்ற அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**(1) கடமை விபரம்**

- முகாமைத்துவத்தினால் பணிக்கப்பட்டவாறு, தொடர்புடைய பிரிவுகளில்/அலகுகளில் தரவுத்தளங்கள், தரவு பதிதல் மற்றும் தொகுத்தல் என்பவற்றைக் கையாளுதல்.
- முகாமையாளர்கள் வழங்கும் வழிகாட்டல்களுக்கமைவாக கணினிகளில் அறிக்கைகள், கடிதங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களைத் தயாரித்தல்.
- தொடர்புடைய தகவல்களையும் தரவுகளையும் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடல்.
- பிரிவுகள்/அலகுகள் மூலம் பராமரிக்கப்பட வேண்டிய இணையம், மின்னஞ்சல்கள், வலைத்தள இணைப்புகள் மற்றும் இணையவழிப் பதிவுகளைக் கையாளுதல்.

**(2) வேண்டப்படும் குறைந்தபட்ச கல்வி/தொழிற் தகைமைகள் மற்றும் அனுபவம்**

க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் ஆங்கிலம், கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் உள்ளடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் அத்துடன் க.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் மூன்று (03) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்பட்ட, தொடர்புடைய துறையில் தேசிய தொழிற்தகைமை மட்டம் (NVQ) 6 இற்குக் குறையாத தேசிய டிப்ளோமா பாடநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

தகவல் தொழில்நுட்பத் துறையில் தகைமைக்குப் பிந்திய 05 ஆண்டுகள் அனுபவம்.

**(3) ஆட்சேர்ப்பு நடைமுறை**

ஆட்சேரப்பானது எழுத்து மூல போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை என்பவற்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் திறமை ஒழுங்கில் மேற்கொள்ளப்படும். போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை என்பவற்றின் மொத்தப் புள்ளகள் மூலம் பெறப்படும் திறமை அடிப்படையில் மாத்திமே நியமனங்கள் வழங்கப்படும். எழுத்துத் பரீட்சை பாடங்கள் (I) மொழிப் புலமை மற்றும் நுண்ணறிவுத் பரீட்சை (II) பதவிக்கு தொடர்புடைய விடய அறிவு.

**(4) சம்பளம் :-** TRC 8.1 -ரூ. 59,432 (10x1173) -(10x1564)-(10x1955)-(10x2346) – 129,812

**(5) வயது :** விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-35 வருடங்கள்

**(6) விண்ணப்பிக்கும் முறை**

1. விண்ணப்பப் படிவத்தை இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ வலைத்தளமான www.trc.gov.lk இலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.
2. தொடர்புடைய படிவத்தை பயன்படுத்தாது அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் தெளிவாகவும் வாசிக்கத்தக்கதாகவும் இருக்க வேண்டும் மற்றும் தேவைப்பாடுகளுடன் பொருந்தாத விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படாது
4. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கல்வி/தொழில்சார் தகைமைகளின் சான்றிதழ்களின் பிரதிகளும் பணி அனுபவ விவரங்களும் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
5. அனைத்து விண்ணப்பங்களும் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளின் சான்றிதழ்களின் பிரதிகளுடன் சேர்த்து "பணணிப்பாளர் நாயகம் - இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல. 276, எல்விடிகல மாவத்தை, கொழும்பு 08" என்ற முகவரிக்கு **2025.03.05** அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தகவல் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம் - வெளிவாரி -2025" என்று குறிப்பிட வேண்டும்.
6. விண்ணப்பத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியை கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளின் சான்றிதழ்களின் பிரதிகளுடன் careers@trc.gov.lk என்ற மின்னஞ்சலுக்கு அனுப்ப வேண்டும். மின்னஞ்சலின் தலைப்பு "Recruitment to the post of **Information Technology Assistant- External – 2025"** எனக் குறிப்பிட வேண்டும்.
7. அரசாங்க நிறுவனங்களில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவர் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.
8. விண்ணப்பங்கள் **2025.03.05** அன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**(7) பொதுவான நிபந்தனைகள்**

1. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டுமென்பதுடன் பதவியின் கடமைகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்கும், நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் பொருத்தமானவராக இருக்க வேண்டும்.
2. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வேண்டப்பட்ட தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பதாரர்கள் பரிசீலனையிற் கொள்ளப்பட மாட்டார்.
3. எவ்விதத்திலும் செல்வாக்குத் தேடுவது தகைமையிழக்கச்செய்யும்.
4. நிரப்ப வேண்டிய பதவிகளின் எண்ணிக்கையை தீர்மானிப்பதற்கு அல்லது பிற்போடு:வதற்கு/இரத்துச்செய்வதற்கு இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு உரிமையைக் கொண்டுள்ளது.
5. இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவானது ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபையொன்றாகும், அதில் தொழிலுக்காக ஆட்சேர்க்கப்படுகின்ற எவரேனும் ஆள், இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாட்டுக்கு கீழுள்ள நிறுவனமொன்றில் உள்ள பதவியொன்றில் அல்லது பதவியொன்றுக்கு அவரது துணைவரின் அல்லது எவரேனும் குடும்ப உறுப்பினரின் நியமனத்திற்கு அல்லது தொழிலுக்கு நேரடியாக அல்லது நேரடியின்றி ஊக்குவிக்க, முன்னேற்ற அல்லது ஆதரவு தேடலாகாது.

பணிப்பாளர் நாயகம்
இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழு
இலக்கம்: 276
எல்விட்டிகல மாவத்தை
கொழும்பு 08